# <u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>

## <u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2019–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18–ம் தேதி (18.02.2019) திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்.B.E
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**<u>மன்றப்பொருள்:-1.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதிகளில் அனுமதியற்ற மனைப்பிரிவு தொடர்பான A4 size நோட்டீஸ்அச்சடிக்கவும், மனைப்பிரிவின் விவரங்களை பொதுமக்கள் அறியும் வண்ணம் நோட்டீஸ் அச்சடிக்கவும், அனுமதியற்ற மனைப்பிரிவு தொடர்பான சுவரொட்டிஅச்சடித்து ஒட்டவும், கூடுதல் பேனர் கால நீட்டிப்பு செய்ய பேனர் தயார் செய்ததற்கும், ICICI Bank நிறுவனத்தால் வழங்கப்பட்ட போஸ்டருக்கு பைப் பிரேம் செய்து அடிக்கவும், மேற்படி பொருள் தொடர்பானது அவசரப் பணி என்பதால் முடிப்பதற்கு ஆணையாளர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்திரவு கொடுக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**

1) ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகையினை விடுவிக்கலாம்.
2) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:- 1403/2016/F1**

**<u>தீர்மான எண் : 37 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்படுகிறது .</u>**

**<u>மன்றப்பொருள்:-2.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குள் ஆரிய வைசிய சங்கம் உள்ளது. இச்சங்கத்திணர்க்கும் பக்கத்து மனையில் வசிப்பவரான திருமதி.ராக்கம்மாள் என்பவருக்கு இடம் உரிமை தொடர்பாக வழக்கு பண்ருட்டி, மாவட்ட உரிமையில் நீதி மன்றத்தில் O.S No. 89/1991 வழக்கு தாக்கல் செய்து தற்சமயம் சென்னை உயர்நீதி மன்றத்தில் 2ம் Appeal No. S.A.No. 2279/2004 தாக்கல் செய்து வழக்கு விசாரணை வரப்பெற்றது என அரசு வழக்கறிஞர் திரு .ந. ஆனந்த் தெரிவித்து கடிதம் 30.01.2019 ல் வரப்பெற்றுள்ளது.

இந்த வழக்கில் நகராட்சி ஆணையர் பிரதிவாதியாக இருப்பதால் வக்காலத்து வரப்பெற்றுள்ளது. இவ்வழக்கிற்கு தோரயமாக ரூ.30000/– செலவாகும். வழக்கறிஞர் கட்டணம் திரு. ந.ஆனந்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

**1.**சென்னை உயர்நீதி மன்ற மேல்முறையீடு வழக்கு Appeal no. S.A.No. 2279/2004 அரசு வழக்கறிஞர் திரு.ந.ஆனந்த் நகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராகி வழக்கை நடத்திடவும் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் வழங்கலாம்.

2.அவசர அவசியத்தினை முன்னிட்டு முன் அனுமதியுடன் வழக்கறிஞர் கட்டணம் வழங்கலாம் .

**ந.க.எண் 248/2019/F1**

**<u>தீர்மான எண் : 38 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்:-3.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் திருத்திய நிர்வாக அனுமதி செயல் முறை ந.க..எண். 30362 /P3 /2018 நாள். 22 .11.2018 ன் படி தமிழ்நாடு துாய்மை இந்தியா திட்டம் (திடக்கழிவு மேலாண்மை திட்டம்) (SBM &SWM ) **2016–17** ஆம் ஆண்டின் கீழ் **ரூ.74.00** இலட்சம் மதிப்பீட்டில் ஆரோக்கியசாமி தெரு உரக்கிடங்கில் பல ஆண்டு காலமாக சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளை பிரித்து உயர் சுரங்க (BIO MINING) முறை மூலம் அகற்றி நிலத்தை மறு சீரமைக்கும் பணியின் ஒப்பந்தபுள்ளிக்காக 12.012.2018 அன்று மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில

நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் விளம்பரம் செய்த வகையில் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புதுறை , சென்னை – 9 அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டு என்த்ரால் கம்யூனிகேசன்ஸ் பிரைவேட் லிமிடெட் (Enthrall Communications Pvt Ltd) , சென்னை அவர்களுக்கு ரூ.18848/– பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் .2023/2018/E1)**

**<u>தீர்மான எண் : 39 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்:-4.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13ல் அர்ஜீனன் வீதி என்ற மனைபிரிவு, வார்டு எண்.14ல் ஸ்ரீ SRK கார்டன் விரிவு – 1 என்ற மனைபிரிவு மற்றும் வார்டு எண்.16ல் முத்துநகர் விரிவு – 1 என்ற மனைபிரிவு ஆதிய மனைபிரிவுகள் உள்ளதால், அம்மனைகளுக்கு காலிமனை வரி விதிக்கப்பட வேண்டிய உள்ளதால், தற்போது சொத்துவரி சீராய்வு பணி மேற்கொண்டபோது இந்நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டுகளிலும் உள்ள அனைத்து தெருக்களை சேர்க்கப்பட்டு மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வார்டு எண்.13ல் அர்ஜீனன் வீதி என்ற மனைபிரிவினை மண்டலம் 'சி' (ZONE 'C') , வார்டு எண்.14ல் ஸ்ரீ SRK கார்டன் விரிவு – 1 என்ற மனைபிரிவினை மண்டலம் 'சி' (ZONE 'C') மற்றும் வார்டு எண்.16ல் முத்துநகர் விரிவு – 1 என்ற மனைபிரிவினை மண்டலம் 'சி' (ZONE 'C') அடிப்படையில் கணினியில் புதியதாக பதிவேற்றம் செய்ய மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரலாம்.

**ந.க.எண்.0114/2019/அ1**

**<u>தீர்மான எண் : 40 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்:-5.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் உள்ள 1 முதல் 30 வரையிலான வார்டுகளில் 1986–87 முதல் 2018–19 முடிய காலிமனை வரி தொகை ரூ.2,46,611/– வசூலிக்கப்படாமல் நிலுவை உள்ளது. இத்தொகையை வசூலிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 115 இனங்களான காலிமனைகளை கண்டுபிடிக்க இயலவில்லை. மேலும், மேற்கண்ட இனங்களுக்கு புதிய சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தின் உரிமையாளர்கள் எங்கு உள்ளனர் எனவும் தெரியவில்லை. எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 115 இனங்களுக்கு காலிமனை வரி வசூல் செய்ய மார்க்கம் இல்லாத காரணத்தால் 1986–87 முதல் 2018–19 வரை உள்ள நிலுவை ரூ.2,46,611/–ஐ 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சசட்டம் பிரிவு 118ன் கீழ் வசூலிக்க முடியாத இனமாக கருதி கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** காலிமனை வரி விதிப்பாளர்கள் தற்பொழுது நகர்ப்பகுதியில் கண்டுபிடிக்க இயலாத நிலையில் உள்ளதாலும், நீண்ட காலமாக வசூலிக்க இயலாமல் கேட்பில் பதிவேட்டில் நிலுவை உள்ளதாலும் மேற்காணும் 115 இனங்களை காலிமனை வரிவிதிப்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1550/2017/அ1**

**<u>தீர்மான எண் : 41 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்:-6.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் **TN31 AH 6556** வண்டிக்கு செல்ப் மோட்டார் மற்றும் டைனமோ மோட்டார் சர்விஸ் செய்து ஷட்டர் பிளக் மாற்றப்பட்டது ரூ.2950 / **TN31 AH 6642** வாகனம் அவ்வண்டியின் **ஜாக்கியின் 'O' ரிங்** பழுதுடைந்துள்ளதால் அதனை புதியதாக பொருத்தம் செய்த செலவு ரூ.3750 /– **TN31 AH 6545** வண்டிக்கு செல்ப் மோட்டார் மற்றும் டைனமோ மோட்டார் சர்விஸ் செய்து ஷட்டர் பிளக் மாற்றப்பட்டது ரூ.2950 /– செலவு செய்யப்பட்டது மேற்கண்ட தொகை மொத்தம் ரூ.9650/–ஐ ஓட்டுநர் திரு.பி.மணி அவர்கள் சொந்த செலவில் மேற்கொள்ளப்பட்டதால், செலவை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண். 439 /2019/எச்1</u>

**<u>தீர்மான எண் : 42 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்:-7.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி அண்ணா நகர் சுகாதார வளாகத்தினுடைய மின் இணைப்பு SC NO . 0192 தற்காலிகமாக மின் துண்டிப்பு செய்ததை மீண்டும் மின் இணைப்பு பெற மறு மின் இணைப்பு கட்டணம் ரூ . 2250 /– திரு. இரா. ஜெயராமன், மின் கம்பியாளர் அவர்களால் செலுத்தப்பட்டது . திரும்ப தொகையை நகராட்சிகளின் சட்டம் 1920 புரிவு 15ன் கீழ் அவசர அவசியம் கருதி அவருக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது. .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண் . 1849/2018/இ1)**

**<u>தீர்மான எண் : 43 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்:-8.</u>** பொங்கல் மலர் 2019 (14.01.2019) முன்னிட்டு நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூர் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். 182/செமதொ/2018 நாள்.27.12.2018ன் படி விளம்பரம் செய்ததில் மாலை மலர் நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ . 10332/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது <u>அலுவலகக்குறிப்பு:–</u>மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 0669/2019/இ1)**

**<u>தீர்மான எண் : 44 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்:-9.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் (SBM) கீழ் பணிகள் செய்ய ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் மாவட்ட அளவில் தினக்குரல் நாளிதழில் 10.10.2018 அன்று புதன் கிழமை 9 எண்ணிக்கை Battery Operated Vehicle (BOV) வழங்குதல் பணி ரூ. 16.50 இலட்சம் என உள்ளதை 13 எண்ணிக்கை Battery Operated Vehicle (BOV) வழங்குதல் பணி ரூ. 24.00 இலட்சம் என திருத்தி கொள்ளுமாறும் மேலும் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் . 26.10.2018 வெள்ளிக்கிழமை என்பதை 31.10.2018 புதன் கிழமை என திருத்தி கொள்ள **திருத்தம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** கடலூர் , செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக தினக்குரல் நாளிதழில் விளம்பரம் செய்ததில் விளம்பரத் தொகை ரூ . 8400/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 3905/2018/இ1)**

**<u>தீர்மான எண் : 45 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்:-10.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் நகர மன்ற தீர்மான எண்.285 நாள்.17.12.2013ன் படி ஜெராக்ஸ் மிஷின் Canon Image Runner 2525 copier அரசு நிர்ணயித்த விலையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் M/s. Excite Inc, புதுச்சேரியில் புதியதாக வாங்கப்பட்டது. மேற்காணும் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து ஜெராக்ஸ் மிஷினுக்கு M/s. Excite Inc, புதுச்சேரி ஜனவரி 29 , 2019 கடிதத்தின் படி 17.02.2019 முதல் 16.02.2020 வரை பராமரிப்பு செலவினம் ரூ. 8750/—ம் ஐ நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு :— மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.0668/2018/இ1)**

**<u>தீர்மான எண் : 46 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்:-11.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் .15 திரொளபதி அம்மன் கோயில் தெரு விடுபட்ட பகுதிக்கு தார் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ . 425000/—ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:-</u> 1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. பொது மக்களின் நலன் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அங்கீககிக்கலாம் .

**(ந.க.எண் . 0648/2019/இ1)**

**<u>தீர்மான எண் : 47 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்:-12.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 249 நாள் 30.10.2018 ன் படி 01.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட குடிநீர் பகீர்மான குழாய்களில் ஏற்படும் அடைப்பு மற்றும் உடைப்பு சரி செய்தல்,சிறு மின் விசை மின் மோட்டார்களில் ஏற்படும் பழதுகளை சரி செய்தல், மோட்டார் ஸ்டாட்டர்களில் ஏற்படும் பழதுகளை சரி செய்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் | 9.00 | M/s.அருணாச்சல அசோசியேட் | 0.21% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.k.N.முருகன் | 3.20% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : –</u> 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான 0.21% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.அருணாச்சல அசோசியேட் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2.பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம் .

(ந.க.எண்:- 4728/2018/இ1)

**<u>தீர்மான எண் : 48 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்:-13.</u>** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 4973/2017/B1 நாள். 19..04.2018 ன் படி மாண்புமிகு அமைச்சர்கள் ஆய்வு கூட்டத்தில் தெரிவித்ததின் அடிப்படையில் மன்ற தீர்மான எண் . 90 நாள் . 30.04.2018 ன் படி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை – 5 அவர்களின் நிர்வாக அனுமதி செயல் முறை ஆணை ந.க.எண் . 13277/2018/WS1 நாள் . 19.06.2018 , தொழில் நுட்ப அனுமதி நாள் . 21.01.2019 ன் படியும் 13.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள சொத்துவரி விதிக்கப்பட்ட குடிநீர் இணைப்பு இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணி . | 74.00 | M/s.அருணாச்சல அசோசியேட் நெல்லிக்குப்பம் | **0.06 %** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.ஜெய் & கோ கடலூர் | **7.19%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு :</u> –வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டை விட **0.06 %** குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . M/s . அருணாச்சல அசோசியேட் , ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் .

**(ந.க.எண். 2020 /2018/இ1).**

**<u>தீர்மான எண் : 49 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்:-14.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக Intercom பழுது ஏற்பட்டதை சரி செய்து நகராட்சிகளின் சட்டம் 1920 புரிவு 15ன் கீழ் அவசர அவசியம் கருதி பட்டியல் தொகை ரூ. 7900/–Clarity Communication , புதுச்சேரி அவர்களுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது. .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண் . 4943/2018/இ1)**

**<u>தீர்மான எண் : 50 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்:-15.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஈப்பு TN-31/BA–1896 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் மேற்படி கீழ்கண்ட பழதுகளை சரி செய்து ரூ.37030/–ஐ தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி பொது நிதியில் வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>பழுதுகள் விபரம்</u>

1. ஆயில் சர்வீஸ் .
2. ரேடியேட்டர் சர்வீஸ் .
3. எலக்ட்ரிக்கல் செக்கப் .
4. கிரௌன் ஆயில் , கியர் ஆயில் செக்கப்
5. வீல் அலாய்மெண்ட்
   மற்றும் இதர பணிகள் .

அலுவலக குறிப்பு :–     1.மன்றம் அனுமதிக்கலாம்
2.அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 0024/2019/இ1)

**தீர்மான எண் : 51 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்:-16.** நெல்லிக்குப்பம் நகராட்சி, தொழில் வரி விதிப்புகள் UTIS சாப்ட்வேரில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதில், பல வரிவிதிப்புகள் இரண்டு முறையும், தவறுதலாகவும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதால் இந்நகராட்சியில் தொழில்புரிவோர்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை UTIS சாப்ட்வேரில் 1162 வரிவிதிப்புகள் என உள்ளது, ஆனால் இந்நகர் பகுதியில் கடைகள், வணிக நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் அனைத்தையும் கணக்கீடு செய்தால் சுமார் 300 முதல் 400 வரிவிதிப்பு எண்களுக்குள் அடங்கும். மேலும் வரிவிதிப்புகள் தவறுதலாகவும், இருமுறையும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதால் தொழில்வரி கேட்பு வசூல் நிலுவை அறிக்கையில் , நிலுவை தொகை அதிகமாவும், தவறுதலாகவும் உள்ளது. மேற்படி கேட்பு வசூல் நிலுவை அறிக்கை உள்ள தொகைக்கும், இந்நகராட்சியில் 2017–18 ம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் உள்ள தொகைக்கும் வேறுபாடு அதிகம் உள்ளது. ஆதலால் அதனை சரி செய்யும் பொருட்டும், தொழில்வரிவிதிப்புகளை ஆறு மாதத்திற்கு ஒரு முறை நேரடியாக கள ஆய்வு செய்து, வரிவிதிப்புகள் சரியானதாக உள்ளதா என்று கண்டறியப்பட வேண்டும் என்பதின் அடிப்படையிலும், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக ஆணையார் அவர்களின் வரி மற்றும் வரியில்லா இனங்கள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டள்ளவாறும், UTIS சாப்ட்வேரில் தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள, தொழில்வரி விதிப்புகளை உடனடியாக நீக்கம் செய்து, தொழில்வரி கேட்பு வசூல் நிலுவை அறிக்கை சரி செய்யப்பட வேண்டும் என்பதன் அடிப்படையிலும் இந்நகராட்சி வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் உதவியாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வார்டுகளில் உள்ள தொழில்வரி விதிப்புகளை நேரடியாக கள ஆய்வு செய்து, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்ட வரிவிதிப்புகள் தற்போது இல்லை எனவும், பல வரிவிதிப்புகள் தவறுதலாகவும், இரண்டு முறையும் உள்ளது எனவும் சான்று செய்துள்ளனர். இவ்வாறு தவறுதலாக உள்ள வரிவிதிப்புகளுக்கான கேட்புத் தொகை ஆண்டுதோறும் கணிணியில் தானகவே கேட்பு உயர்ந்துக்கொண்டே வருவதால் தொழில்வரி வசூல் சதவிகிதம் மிகவும் குறைவாக காணப்படுகிறது. இதுக்குறித்து கடலூர் பெருநகராட்சியில் 24.01.2019 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களால் நடத்தப்பட்ட வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூல் குறித்தான ஆய்வு கூட்ட நடவடிக்கையில், 17.12.2018 அன்று நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் கூடுதல் இயக்குநர்அவர்களால் நடத்தப்பட்ட வரிவசூல் தொடர்பான ஆய்வு கூட்ட நடவடிக்கையில் தெரிவித்துள்ளவாறு, தொழில்வரி கேட்பு எண்ணிக்கையின் சரிதன்மையை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் சரிப்பார்த்து சான்றளிப்பதுடன், தவறாக உள்ள தொழில்வரி கேட்புகளை ஆய்வு செய்து 30.01.2019 க்குள் குறைக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நெல்லிக்குப்பம் நகராட்சியில், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்ட தவறுதாலகவும், இருமுறை பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள தொழில்வரிவிதிப்புகள் மற்றும் அதற்கான கேட்புகள் அனைத்தையும் UTIS சாப்ட்வேரில் இருந்து நீக்கம் செய்திட வேண்டி மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவவகக்குறிப்பு**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு அவர்களின் 24.01.2019ம் தேதிய கூட்ட நடவடிக்கைகளின் படியும், இந்நகராட்சி வருவாய் ஆய்வர் மற்றும், வருவாய் உதவியாளர்களின் கள ஆய்வு

சான்றில் அடிப்படையிலும், UTIS சாப்ட்வேரில் தவறுதலாக உள்ள தொழில்வரி விதிப்பு எண்கள் மற்றும் அதற்கான கேட்புகளை நீக்கம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 48/2016/எச்2)**

**தீர்மான எண் : 52 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி